

## திருக்குறள்

**அதிகாரம் – அறன்வலியுறுத்தல்**

குறள் : 35 அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்

குறள் விளக்கம்:
பொறாமை, ஆசை, சினம், கடுஞ்சொல் என்னும் நான்கிற்கும் ஒரு சிறிதும் இடம் தராமல் ஒழுகி வருவதே அறம் ஆகும் .

**“யாதும் ஊரே யாவரும் கேளிர்”** என்ற புறநானூற்றுப் பாடலின் மூலம் சங்க காலப் புலவர் கணியன் பூங்குன்றனார் பழங்காலத் தமிழர்களின் பண்பாட்டை விளக்கியுள்ளார். தமிழர்களாகிய நாம் பல்லாயிரம் ஆண்டுகளைக் கடந்த மாபெரும் கலாசாரத்தின் வாரிசுகள். தமிழ் கலாசாரம் என்பது தமிழரின் வாழ்வியல் முறையே தவிர வேறில்லை. மனித இனம் எப்படி வாழ வேண்டும் என்பதனை விட, எப்படி வாழக் கூடாது என்று வாழ்வியலை கற்றுக் கொடுத்திருக்கிறது தமிழரின் பண்பாடு. இவ்வாறு சிறப்புப் பெற்ற எம் தமிழை நம் சிறார்களுக்கு கற்பிக்கும் தலையாய கடமையை செவ்வனே செய்யும் மவுண்ட் றூயிட் தமிழக் கல்வி நிலையம் தமிழை மட்டுமன்றி மாணவர்களை பண்பு, ஒழுக்கம், பணிவு, தன்னம்பிக்கை, ஆளுமை கொண்ட சிறந்த மாணவர்களாக உருவாக்கி வருவதுடன் அவர்களை ஒரு பொறுப்பு வாய்ந்த மாணவ சமுதாயமாகவும் உருவாக்கிவருகின்றது என்றால் மிகையாகாது. கடந்த வருடம் முதல் மீண்டும் எமது கல்வி நிலைய மாணவர்கள் HSC பரீட்சையை எடுப்பதன் மூலம் எமது முயற்சிக்கு உரமேற்றி வருகின்றார்கள் என்றால் மிகையாகாது. இச்சிறப்பு பெற்ற எமது கல்வி நிலையத்தில் தமிழ் கற்றிட வந்திருக்கும் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் 2024ம் ஆண்டுக்கான செயற்குழு உறுப்பினர்களின் அன்பான வணக்கம். இச்செய்திமடல் மூலம் பின்வரும் விடயங்களை உங்கள் கவனத்திற்குச் சமர்ப்பிக்கின்றோம்.

### 1. *பாடசாலை விபரம்*

| | |
|---|---|
| வகுப்புகள் / **Classes :** | முன்பள்ளி முதல் ஆண்டு 12 HSC தமிழ் வரை / **Preschool to HSC** |
| நடைபெறும் இடம் / **Centre Location :** | **Colyton Public School**, 43 - 81 Nelson Street, Mount Druitt, NSW 2770 |
| மின்னஞ்சல் / **Email :** | mtdruitttsc@gmail.com |
| இணையத்தளம் /**Website :** | www.mtsc.org.au |
| முகப்புத்தகம் / **Facebook :** | https://www.facebook.com/groups/374995486577634/ |
| கைப்பேசி / **Mobile Phone :** | **0413 229 638** |

### 2. *பாடசாலை நேரம் – பி.ப. 2:00 மணி முதல் பி.ப. 5:00 மணிவரை*

பிள்ளைகளை பாடசாலைக்கு பி.ப. 1.55 மணிக்கு அனுப்பிவைக்குமாறும், பாடசாலை முடிவடையும் போது தாமதமாகாமல் வந்து அழைத்துச் செல்லுமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

| | |
|---|---|
| ஆரம்பமாகும் நேரம் : | பி.ப. 2.00 மணி |
| இடைவேளை : | பி.ப. 3.30ல் இருந்து பி.ப. 3.45 மணி வரை |
| முடிவடையும் நேரம் : | பி.ப. 5.00 மணி (முன்பள்ளி மற்றும் ஆரம்பப்பள்ளி பி.ப. 4.30 மணி வரை) |

பாடசாலை தொடர்பான மேலதிக விபரங்களுக்கு :

3. *2024ம் ஆண்டு பாடசாலையின் முக்கிய திகதிகள்*

முதலாம் தவணை : 10.02.2024 முதல் 13.04.2024 வரை *

இரண்டாம் தவணை : 04.05.2024 முதல் 06.07.2024 வரை *

மூன்றாம் தவணை : 27.07.2024 முதல் 28.09.2024 வரை *

நான்காம் தவணை : 19.10.2024 முதல் 21.12.2024 வரை *

| | |
|---|---|
| பொங்கல் திருவிழா : | 10.02.2024 |
| குடும்ப குதூகல தினம் : | 13.04.2024 |
| பேச்சுப்போட்டி : | 01.06.2024 |
| அரையாண்டுப் பரீட்சை : | 22.06.2024 |
| அரையாண்டு மாணவர் தேர்ச்சி அறிக்கை: | 06.07.2024 |
| கலைவிழா : | 28.09.2024 * |
| சரஸ்வதி பூஜை (வாணி விழா) : | 19.10.2024 * |
| ஆண்டிறுதிப் பரீட்சை : | 23.11.2024 |
| ஆண்டிறுதி மாணவர் தேர்ச்சி அறிக்கை : | 14.12.2024 |
| ஒளி விழா, பரிசளிப்பு விழா மற்றும் புதிய செயற்குழு தெரிவு : | 21.12.2024 |

4. *இணையவழி தொலைதூர தமிழ்க் கல்வி*

இந்த தவணை முதல் எமது பாடசாலையினால் இணையவழி தொலைதூர தமிழ்க் கல்வி ஆரம்பிக்கப்பட்டு வெற்றிகரமாக நடைபெற்று வருகின்றது. இதில் இணைய விரும்பும் உங்களுக்கு தெரிந்த எமது தமிழ்பாடசாலைக்கு வர முடியாத தொலைவில் உள்ள மாணவர்கள் இணைந்து பயன் பெறலாம் என்பதை உங்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

5. *பெற்றோர் கலந்துரையாடல்*

எதிர்வரும் 22.06.2024 சனிக்கிழமை அன்று பி.ப. 2.15 மணிக்கு நடைபெற இருக்கும் பாடசாலை பற்றிய முக்கிய கலந்துரையாடலுக்கு சகல பெற்றோர்களையும் சமுகமளிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

6. *அமைச்சர் விருது - 2024* (Minister Award)

இந்த வருடம் அமைச்சர் விருதுபெறுவதற்கு தகுதியான எமது பாடசாலை மாணவர்களில் தெரிவை வரும் இரண்டு வாரங்களும் எமது பாடசாலை அதிபர் மற்றும் கல்விக்குழுவினர் மேற்கொண்டுள்ளார்கள். தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு எமது பாடசாலை அதிபர் ஏற்கனவே தொடர்பு கொண்டுள்ளார் என்பதையும் உங்களுக்கு அறியத்தருகின்றோம்.

7. *பேச்சுப் போட்டி - 2024 ( 01.06.2024 பி.ப. 1:00 மணி)*

எமது பாடசாலையின் வருடாந்த **பேச்சுப்போட்டி எதிர்வரும் 01.06.2024 சனிக்கிழமையன்று மாலை 1.00 மணி முதல் பாடசாலை மண்டபத்தில்** ஆரம்பமாகி நடைபெறும். போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்களின் இலக்க ஒழுங்கு அன்றைய தினமே தீர்மானிக்கப்படுவதால் அனைத்து மாணவர்களும் மாலை 1.00 மணிக்கு முன்னதாக சமூகமளித்து தங்கள் அடையாள எண்ணைப் பெற்றுக்கொள்ளவும். முதலாம் தவணை முடிவில் அந்தந்த வகுப்பு ஆசிரியர்கள் பேச்சுப்போட்டிக்கான பிரதிகளை மாணவர்களுக்கு வழங்கியுள்ளார்கள். இதுவரை அதனை பெற்றுக்கொள்ளாதவர்கள் அதனை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். அனைத்து பாடசாலை மாணவர்களும் பேச்சுப்போட்டியில் பங்குபற்ற வேண்டும் என்பது எமது குறிக்கோள். எனவே பெற்றோர்கள் உங்கள் பிள்ளைகளுக்கு அவற்றை மனப்பாடம் செய்வதிலும் மற்றும் அதனை திறமையாக மேடையில் பேசுவதற்கும் உதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

8. *ஆண்டு மலருக்கான நிழற்படம் எடுத்தல் -* 01.06.2024



**பேச்சுப்போட்டி நடைபெறும் தினமான எதிர்வரும் 01.06.2024 அன்று ஆண்டு மலருக்கான நிழற்படம்** எடுக்க இருப்பதனால் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் எமது கலாச்சார உடையணிந்து வருகைதருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

9. *அரையாண்டுப் பரீட்சை -* 22.06.2024

மாணவர்களுக்கான **அரையாண்டுப் பரீட்சை எதிர்வரும் 22.06.2024** அன்று முதல் வகுப்பு ஆசிரியர்களினால் ஏற்பாடு செய்யப்பட்டு நடாத்தப்படும். எனவே பரீட்சை தொடர்பான விபரங்களை உங்களது பிள்ளைகளின் வகுப்பு ஆசிரியர்களிடம் கேட்டு அறிந்து கொள்ளவும்.

10. *கலாநிதி இளங்கோ வேந்தனார் ஞாபகார்த்த புலமைப் பரீட்சை* (Federation Exam) - 17.08.2024

தமிழ் பாடசாலைகளின் கூட்டமைப்பினால் வருடந்தோறும் நடாத்தப்படும் கலாநிதி இளங்கோ வேந்தனார் ஞாபகார்த்த புலமைப் பரீட்சை அடுத்த தவணை ஆரம்பத்தில் எதிர்வரும் **17.08.2024** அன்று எமது பாடசாலையில் நடைபெறும்.

11. *பாடசாலை அறிவித்தல்கள்*

அவ்வப்போது பாடசாலை சம்பந்தப்பட்ட அறிவித்தல்கள் செய்திமடல், மின்அஞ்சல், இணையத்தளம், முகப்புத்தகம் , பெற்றோர் கலந்துரையாடல் மற்றும் மாணவர் வகுப்பு வாட்ஸ்அப் குழு மூலம் அறிவிக்கப்படும். எனவே ஒவ்வொரு பெற்றோரும் தங்களது சரியான மின்னஞ்சல் முகவரியை பாடசாலை தரவுத்தளத்தில் (School Database) பேணுவதுடன் தங்கள் பிள்ளைகளின் வகுப்பு வாட்ஸ்அப் குழுவில் இணைந்திருப்பதையும் உறுதிப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

## 12. பொங்கல் திருவிழா (மாதிரிப் பொங்கல்)

எமது பாடசாலையில் இந்தவருடமும் 10.02.2024 திகதியன்று கொண்டாடப்பட்ட மாதிரிப் பொங்கல் திருவிழா சிறப்புற நடைபெற பூரண ஒத்துழைப்பை வழங்கிய மாணவர்கள், பெற்றேர்கள், ஆசிரியர்கள் மற்றும் எமது செயற்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் எமது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.



## 13. ஆசிரியர் பயிற்சிப் பட்டறை

எமது இந்த வருட ஆசிரியர் பயிற்சிப்பட்டறை 25.02.2024 அன்று பாடசாலை மண்டபத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றிருந்தது. இதில் ஆசிரியர்களின் குழு கலந்தாய்வு, ஏற்படும் இடர்கள், அதன் நிவர்த்தி, பாடசாலையின் பங்களிப்பு உள்ளிட்ட விடயங்களை உள்ளடக்கியதாக தங்கள் வகுப்புநிலை குழுக்களாக பிரிந்து தங்கள் குழுக்களிடையே கலந்துரையாடல்களை மேற்கொண்டு கலந்தாய்வு விடயத்தின் தொகுப்பை ஆசிரியர் பயிற்சிப்பட்டறையில் தெரிவித்திருந்தார்கள். அன்றைய தினம் சிறப்பு விருந்தினராக திரு. சரவணமுத்து தேவராஜா ஆசிரியர் பங்குபற்றி ஆசிரியர்களுக்கு சிறந்த ஆலோசனைகளை தனது அனுபவங்களையும் பகிர்ந்து சிறப்பித்திருந்தார். அவருக்கு எமது பாடசாலையின் சார்பில் நன்றி.



## 14. குடும்ப குதூகல தினம் ( Family Fun Day)

எமது பாடசாலையின் இந்த வருடம் குடும்ப குதூகல தினம் 13.04.2024 திகதியன்று சிறப்பாக பாடசாலை மாணவர்கள் பங்குபற்றும் பல்வேறுபட்ட போட்டிகள் ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகக் குழு உறுபினர்கள் துணையுடன் நடைபெறள்ளிருந்தது. இதற்கு பூரண ஒத்துழைப்பை வழங்கிய மாணவர்கள், பெற்றேர்கள், ஆசிரியர்கள் மற்றும் எமது செயற்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் எமது நன்றியை தெரிவித்துக்கொளவதுடன் அன்றைய தினம் புதிதாக தெரிவு செய்யப்பட்ட மாணவ முதல்வர்களையும் வாழ்த்துகின்றோம். புதிதாக இடம்பெற்ற வினோத உடைப்போட்டியில் பங்குப்பற்றிய மாணவர்களுக்கும் நன்றி.



### 15. சித்திரைப் புத்தாண்டு சிறப்பு நிகழ்வு - கவியரங்கமும், கதை கூறலும்

எமது பாடசாலையின் ஆண்டு 10,11,12 வகுப்பு மாணவர்களது "கவியரங்கமும் கதை கூறலும்" நிகழ்வு 04.05.2024 அன்று மிகவும் சிறப்பாக நடைபெற்றிருந்தது. இந்த அருமையான நிகழ்வை தொகுத்து வழங்கிய ஆசிரியர் இரங்கநாதன் மற்றும் செல்வராஜி ஆசிரியர்களுக்கு பாடசாலை நிர்வாகத்தின் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்வதோடு அன்றைய நிகழ்வில் பங்குபற்றிய அம்மாணவர்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கின்றோம். பார்வையாளராக பங்குபற்றி மாணவர்களை ஊக்கப்படுத்திய பெற்றோர்களுக்கும் ஏனைய மாணவர்களுக்கும் நன்றி.



### 16. மாணவர்களின் விபரங்கள்

அனைத்து மாணவர்களின் கல்வி கற்கும் பிரதான பாடசாலை, வகுப்பு, பிறந்த திகதி, தொலைபேசி இலக்கம், முகவரி, மின் அஞ்சல் முகவரி மற்றும் WhatsApp செயலி விபரங்கள் அடங்கிய தரவுத்தளம் (Database) பாடசாலையால் பேணப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இதுவரை இவ்விபரங்களை பதிவு செய்யாத மாணவர்களது பெற்றோர்கள் உடனடியாக பாடசாலை நிர்வாகத்தை தொடர்பு கொண்டு பதிவு செய்யும்படியும் மற்றும் தங்களது பதிவில் ஏதேனும் திருத்தம் மேற்கொள்ள வேண்டியவர்களும் பாடசாலை நிர்வாகத்தை தொடர்பு கொண்டு திருத்தங்களை மேற்கொண்டு தங்களது சரியான தகவல்கள் பேணப்படுவதை உறுதிப்படுத்துமாறும் தங்களை பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

### 17. பாடப்புத்தகங்கள்

பாடப்புத்தகங்கள் மற்றும் பயிற்சிப்புத்தகங்கள் என்பன எமது கல்வி நிலையத்தினால் வழங்கப்படும். முன் பள்ளி மற்றும் ஆரம்பப் பள்ளி மாணவர்களுக்கு எமது பாடசாலையின் ஆசிரியர்களினால் பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்ட இணைய வழியுடன் கூடிய பாடம் மற்றும் பயிற்சிப் புத்தகங்கள் கடந்த வருடம் முதல் வகுப்பறை கற்றலுக்காக பயன்படுத்தப்படுகின்றது. அது தவிர ஆண்டு 1 முதல் ஆண்டு 8 வரையான மாணவர்களுக்கு நியூ சவுத்வேல்ஸ் தமிழ் பாடசாலைகள் கூட்டமைப்பின் பாடம் மற்றும் பயிற்சி புத்தகங்களுடன் பிரத்தியேகமாக ஆசிரியர்களினால் தயாரிக்கப்பட்ட பாடத் திட்டமிடல்கள், ஆண்டு 9 முதல் ஆண்டு 12 HSC மாணவர்களுக்கு தற்போதைய புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்ட பாடத்திட்டங்களுடன் மாணவர் சுய மதிப்பீடுகளும் நடைபெறுகின்றன.

### 18. ஆசிரியர் மற்றும் அதிபர் விருதுகள்

மாணவர்கள் வகுப்பில் தமது திறமைகளை வெளிப்படுத்துதல், ஒழுக்கமாக இருத்தல், ஆசிரியர் கற்பிப்பதை கவனமாக செவிமடுத்தல், மற்றவர்களுக்கு முன்மாதிரியாக இருத்தல் போன்றவற்றிற்காக ஆசிரியரினால் மாணவர்களுக்கு ஆசிரியர் விருது வகுப்பில் வழங்கப்படும். ஐந்து ஆசிரியர் விருதுகள் பெற்ற மாணவர்கள் ஒரு அதிபர் விருதுக்கு தகமையுடையவர்களாக கருதப்பட்டு அவர்களுக்கு பாடசாலை ஒன்றுகூடலின் போது அதிபரால், அதிபர் விருது வழங்கப்படும்.

### 19. மதிப்பீடுகள்

ஒவ்வொரு தவணை முடிவிலும் எழுத்து மற்றும் வாசிப்பு தவணை மதிப்பீடுகள் (Term Assessments) நடாத்தப்படும்.

- முதலாம் தவணை முடிவில் முதலாம் தவணை மதிப்பீடு (Term 1 Assessment) நடாத்தப்படும்.
- இரண்டாம் தவணை முடிவில் அரையாண்டுப் பரீட்சை நடைபெறும். அதில் வாசிப்பு, எழுத்து, வாய்மொழித் தொடர்பாடல் என்பவற்றுடன் பேச்சுப் போட்டிக்கான மதிப்பீடும் (Half-yearly Assessment) நடாத்தப்படும், இம் மதிப்பீட்டின் புள்ளிகள் மாணவர் தேர்ச்சி அறிக்கையில் உள்ளடக்கப்படும்.
- மூன்றாம் தவணை இறுதியில் மூன்றாம் தவணை மதிப்பீடு (Term 3 Assessment) நடாத்தப்படும்.
- நான்காம் தவணை இறுதியில் ஆண்டிறுதிப் பரீட்சை நடைபெறும். அதில் வாசிப்பு, எழுத்து, பேச்சு மற்றும் வாய்மொழித் தொடர்பாடல் என்பவற்றுக்கான மதிப்பீடு (Year-end Assessment) நடாத்தப்படும். இம் மதிப்பீட்டின் புள்ளிகள் மாணவர் தேர்ச்சி அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

### 20. முதலுதவி சேவை (First Aid)

மாணவர்களுக்கு முதலுதவி தேவையேற்படின் எமது கல்விநிலைய முதலுதவி உத்தியோகத்தர்கள் திரு. பரமேஸ்வரன் இரங்கநாதன், திருமதி. பலோமியற் அன்ரனிஸ்ராலின், திரு. ஆறுமுகசாமி பேரின்பமூர்த்தி, திரு. தேவராஜா சதீஸ்கரன் ஆகியோர்களுடன் தொடர்புகொள்ளவும்.

### 21. ஒவ்வாமை (Allergy)

பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு ஏதாவது உணவுப்பண்டங்கள், குளிர்பானங்கள், பால், கடலை மற்றும் ஏனைய உணவுப்பொருட்களுக்கு ஒவ்வாமை இருக்குமானால் அதுபற்றி நிர்வாகக் குழுவிற்கும் உங்கள் பிள்ளைகளின் வகுப்பு ஆசிரியர்களுக்கும் அறியத்தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

### 22. பெற்றோர்களின் உதவி

வகுப்பு இடைவேளையின் போது மாணவர்களுக்கு குளிர்பானம், தேநீர் மற்றும் தின்பண்டங்கள் வழங்குவதற்கு பெற்றோர்கள் செயற்குழுவின் உப செயலாளர் திரு.க.சுதாகரன் (தொலைபேசி இல : 0415 788 466) அவர்களை தொடர்புகொண்டு உங்கள் பெயர்களை பதிவுசெய்யும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

வகுப்பு இடைவேளையின் போது விளையாட்டு மைதானத்தில் மாணவர்களை கண்காணிப்பதற்கு பெற்றோர்களின் உதவி மிகவும் அவசியமாக உள்ளது. எனவே இதற்கு உதவி செய்ய விரும்பும் பெற்றோர்கள் எமது உப அதிபரை தொடர்புகொண்டு உங்கள் பெயர்களை பதிவுசெய்யும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

### 23. பாடசாலையில் மாணவர்களின் ஒழுங்கு முறைகள்

- வகுப்பறையில் அமைதியாக இருந்து ஏனைய மாணவர்களை குழப்பாமல் ஆசிரியரின் சொல்லுக்கு கீழ்படிந்து நடந்து கொள்ள வேண்டும். உங்கள் ஆசிரியர் வகுப்பறைக்குச் சென்றதன் பின்புதான் மாணவர்கள் வகுப்பறைக்கு செல்ல வேண்டும். அத்துடன் வகுப்பு முடிந்ததும் வகுப்பறையை பாடசாலை ஆரம்பிக்க முன்பு இருந்த ஒழுங்கு முறைக்கு ஏற்ப ஆசிரியருடன் சேர்ந்து ஒழுங்குபடுத்திய பின்பு தான் வெளியேற வேண்டும்.
- வகுப்பறை பொருட்களை சொந்த தேவைகளுக்கு பயன்படுத்தாமலும் வகுப்பறையில் உள்ள உடமைகளை சேதப்படுத்தாமலும் இருக்க வேண்டும். வகுப்பறையில் மாணவர்கள் சக மாணவர்களின் பொருள்களை அனுமதி இல்லாமல் எடுத்தல் அல்லது ஒளித்து விளையாடுதல் போன்றவற்றை தவிர்த்தல் வேண்டும்.
- வகுப்பறையில் மாணவர்கள் தொலைபேசியையோ அல்லது ஏனைய இலத்திரனியல் உபகரணங்களையோ (IPad, Tablet, Nintendo, etc ) பாவிப்பதை கட்டாயமாக தவிர்க்க வேண்டும்.
- வகுப்பு இடைவேளையின் போது வழங்கப்படும் குளிர்பானம், தேநீர் மற்றும் சிற்றூண்டிகளை வரிசையில் வந்து பெற்றுக்கொள்வதுடன் அவற்றை வகுப்பறைக்கு கொண்டு செல்வதை தவிர்க்க வேண்டும். இடைவேளை நிறைவடைந்து வகுப்பறை செல்லுமுன் உங்களிடம் எஞ்சியுள்ள உணவுப்பண்டங்களையும், குளிர்பானம் அருந்திய வெற்றுக் குவளைகளையும் மற்றும் குப்பைகளையும் தவறாமல் குப்பைத் தொட்டியில் போடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

### 24. மாணவர்கள் தமிழைக் கற்பதில் பெற்றோர்களின் ஈடுபாடு

ஆசிரியர்கள் தமிழைக் கற்பித்தாலும் பெற்றோர்களே தங்கள் குழந்தைகளின் பிரதான கல்வியாளர்கள். எனவே பாடசாலையினதும் வீட்டினதும் கூட்டு முயற்சியினாலேயே குழந்தையின் தமிழ் மொழி அறிவு வளரும் என்பதால் தமிழ் மொழி கற்பித்தல் பணியில் ஈடுபட பெற்றோர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

அதாவது:

- தமிழில் குழந்தைகளுடன் முடிந்தவரை பேசுவது
- வீட்டுப்பாடம் மற்றும் பிற பாடசாலை நடவடிக்கைகள் மூலம் குழந்தைகளுக்கு வழிகாட்டுதல்
- குழந்தைகளின் முன்னேற்றம் குறித்து வகுப்பு ஆசிரியருடன் அல்லது அதிபருடன் கலந்துரையாடுவது
- பாடசாலை ஏற்பாடு செய்த சிறப்பு விழாக்களில் கலந்துகொள்வது
- பாடசாலை நடவடிக்கைகளில் பங்கேற்பது
- பாடசாலை நிர்வாகத்தில் இணைந்து பாடசாலையின் வளர்ச்சிக்கு உதவுவது

### 25. HSC பிரத்தியோக வகுப்பு

தற்பொழுது மாணவர்களை HSCல் தமிழை ஒரு பாடமாக எடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளில் தற்போது பிரத்தியோக வகுப்புக்களும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பதையும் தங்களுக்கு தெரிவிக்க விரும்புகின்றோம். பெற்றோர்களாகிய நீங்கள் உங்களது பிள்ளைகளை HSCயில் தமிழை ஒரு பாடமாக எடுத்து எமது தேன்மதுர தமிழ் மொழியை இவ்அவுஸ்திரேலியக் கண்டத்தில் பரவும்வகை செய்திட வேண்டி நிற்கின்றோம்.

### 26. பாடசாலை வாகனத் தரிப்பிடம் மற்றும் Pickup and drop off zone.







பெற்றோர்கள் தயவுசெய்து பாடசாலை சுற்றாடலில் உள்ள வீடுகளின் வாகனம் செல்லும் பாதைகளை (Driveway) மறித்து தமது வாகனங்களை நிறுத்தவோ/பாதைகளை பாவித்து தமது வாகனங்களைத் திருப்பவோ (“U” Turn) வேண்டாம் என்று மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம். இவை சட்டவிரோத செயல்கள் மட்டுமல்லாது பாடசாலை சுற்றாடலில் உள்ளவர்களுக்கு மிகுந்த அசௌகரியங்களை ஏற்படுத்துவதுடன் எமது மவுண்றூயிட் தமிழ்க் கல்வி நிலையத்திற்கு அவப்பெயர் ஏற்படுத்துவதாகவும் அமைகின்றது. ஆகையினால் தயவுசெய்து வாகனங்களை வீதி ஒழுங்கு முறைகளுக்கமைய பாதை ஓரத்தில் நிறுத்தி மவுண்றூயிட் தமிழ்க் கல்வி நிலையத்தின் செயற்பாடுகளிற்கு உதவி செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் பாடசாலையின் நுழைவு வாயில் அருகே ஒரு இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் தயவுசெய்து மாணவர்களை பாடசாலை நேரத்தில் வாகனத்திலிருந்து இறக்கிவிடவும் பின்பு அழைத்துச் செல்லவும் மட்டுமே பயன்படுத்துமாறும் வாகனத் தரிப்பிடமாக பயன்படுத்த வேண்டாம் எனவும் தங்களை அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

### 27. நூலக சேவை (நூலகம்)

எமது மாணவர்களின் தமிழ் மொழித் திறனை விருத்திசெய்வதற்கு வாசிப்பு மிகவும் அவசியம். இதற்கு உதவிட மவுண்ட் றூயிட் தமிழ்க் கல்வி நிலைய நூலகம் தன்னால் முடிந்த வரை உதவிடவுள்ளது. இதற்காக மாணவர்கள் நூல்களை வீட்டிற்கு எடுத்துச்சென்று வாசிப்பதற்காகக் கொடுக்கப்படவுள்ளது. பல்வேறு தமிழ்க் கதைப்புத்தகங்களும் இறுவெட்டுக்களும் மாணவர்களின் மேலதிக வாசிப்புக்காக வழங்கப்படும். இந்நூல்களை உரிய நேரத்தில் நல்ல நிலையில் மீளளிப்பது, பெற்றோர்களதும் மாணவர்களதும் கடமையாகும். புத்தகங்களில் சேதங்கள் ஏற்படுமிடத்து இது பற்றி உடனடியாக எமக்கு அறியத்தரவும். தயவுசெய்து உங்கள் குழந்தைகள் தமிழ்ப் புத்தகங்கள் வாசிப்பதை ஊக்கப்படுத்துங்கள். அவர்களுடன் அமர்ந்து அவர்கள் தமிழ்ப் புத்தகங்கள் வாசிக்க உதவுங்கள். எமது பாடசாலையில் கல்வி கற்கும் காலத்தில் மாணவர்கள் அதிக தமிழ் நூல்களைக் கற்றுப் பயனடைவர் என்று எதிர்பார்க்கிறோம்.

### 28. மாணவர்கள் வாசிப்புத்திறனை ஊக்குவித்தல்

மாணவர்களது வாசிப்புத்திறனை ஊக்குவிப்பதற்காக இந்த வருடம் முதல் தமிழ் வாசிப்புத்திறனுக்கான அறைகூவல் என்ற திட்டத்தின் மூலம் மாணவர்கள் நூலகத்தை பயன்படுத்தி தமது வாசிப்புத்திறனை மேம்படுத்த எண்ணியுள்ளோம். மாணவர்கள் தமிழ் எழுத்துக்களை அறிவதுடன் தமிழில் உள்ள நல்ல பல நூல்களை வாசிப்பதுவும் இதன் நோக்கம். வருட இறுதியில் இதில் தகுதி பெறும் மாணவர்களை ஊக்குவிக்க சில பரிசுகளை பாடசாலை நிர்வாகம் வழங்க உத்தேசித்துள்ளது என்பதையும் தங்களுக்கு அன்புடன் அறியத்தருகின்றோம்.

### 29. மாணவர்கள் தமிழில் கதைப்பதை ஊக்குவித்தல்

பேசப்படாத மொழி புவியில் வாழ்ந்ததில்லை. மாணவர்கள் மொழியை பயன்படுத்தி கற்க வேண்டும். தமிழில் உரையாட வேண்டும். எனவே பாடசாலை வகுப்பறை தவிர்ந்த ஏனைய இடங்களிலும் சக மாணவர்களுடன் தமிழில் பேசுவதை ஊக்குவிக்க சில பரிசுகளை பாடசாலை நிர்வாகம் வழங்கி வருவதுடன் ஆர்வமுள்ள ஏனைய பெற்றோர்கள் எமது தலைவர் திரு.ஆ.பேரின்பமூர்த்தி அவர்களைத் தொடர்பு கொள்ளுமாறு தங்களுக்கு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

### 30. பாடசாலை விடுமுறை

எமது பாடசாலையின் தவணை இரண்டு எதிர்வரும் **06.07.2024** அன்றுடன் முடிவடைந்து தவணை மூன்று வருகின்ற **27.07.2024** அன்று ஆரம்பமாகும் என்பதையும் உங்களுக்கு அறியத்தருகின்றோம்.



நன்றி

மவுண்ட் றூயிட் தமிழ்க் கல்வி நிலைய நிர்வாகம்.



**மனதிலுறுதி வேண்டும்**
**வாக்கினி லேயினிமை வேண்டும்**
**நினைவு நல்லது வேண்டும்**
**நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்**
**கனவு மெய்ப்பட வேண்டும்**
**கைவசமாவது விரைவில் வேண்டும்**
**தனமும் இன்பமும் வேண்டும்**
**தரணியிலே பெருமை வேண்டும்** - **மகாகவி பாரதியார்**